**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் நாள் புதன்கிழமை**

**O.S. 70/2022**

வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW2–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | தாலுக்கா | : நாகப்பட்டினம் |
| த/பெ | : கஜேந்திரன் | கிராமம் | : நாகப்பட்டினம் டவுன் |
| ஜாதி | : | தொழில் | : சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளர் |
| சமயம் | : | வயது | : 40/26 |

**முதல் விசாரணை**

நான் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். திருவாரூர் எண்.1 இணை சார்பதிவாளர் அவர்களுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வர பெற்றது. மேற்படி சார்பதிவாளர் அவர்களுக்காக சாட்சியம் அளிக்க திருவாரூர் இணை சார்பதிவாளர் அவர்களிடமிருந்து அனுமதி பெற்றுள்ளேன். அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

வா.சா.ஆ.1 ஆவணம் திருவாரூர் எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் சான்றிட்ட நகலை எடுத்துவந்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணமானது சண்முகம்பிள்ளை அவர்களுக்கு பொட்டுபொண் என்கிற

ரத்தினமாளுக்காக அவரது கார்டியனாக குமாரசாமிபிள்ளை எழுதிகொடுத்த சுத்த கிரய சாசனமாகும். அதன் சொத்து விபரமானது தேவர்கண்ட நல்லூர் புலஎண்.57/1 ல் நஞ்சை 93 சென்டில் 33.1/3 சென்ட் – க்கு 100 குழி ஆகும். மேற்படி சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் எடுத்துவந்துள்ளேன். மேற்படி சொத்தை பொறுத்து சண்முகம் பிள்ளை என்பவரால் வேறு யாருக்கும் பதிவு ஆவணம் எழுதிகொடுக்கப்படவில்லை.

வா.சா.ஆ.2 ஆவணமானது எண்.1 திருவாரூர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். அதன் சான்றிட்ட நகலை எடுத்துவந்துள்ளேன். வா.சா.ஆ2 ஆவணமானது 19.07.2007ம் தேதி கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு சிவகடாச்சம் மகளும் ராமமூர்த்தியின் மனைவியுமான லதா மற்றும் சிவகடாச்சம் சத்தியகுமாரர் ஆகிய இருவருக்காகவும் மாரிமுத்துபிள்ளை குமாரர் ராமமூர்த்தி பவர் ஏஜென்டாக எழுதிகொடுத்த சுத்த கிரய சாசனமாகும். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் மூல ஆவணமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. பொது அதிகார ஆவணம் குறித்து மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 2 சொத்துவிபரத்தில் தேவர்கண்டநல்லூர் கிராமம் RS. No.57/1 நஞ்சை 43 சென்ட் என கண்டுள்ளது. மேலும் சொத்து விபரத்தில் தற்போது கிராம கணக்கு UDR படி 57/1B 1 ல் 0.13.5 ஏர்ஸ் என்றும் 57/1B2 ல் 0.17.5 ஏர்ஸ் என்றும் பிரிவாகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 சொத்து விபரத்தில் UDR கணக்குபடி கூடுதல் 31 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதும் கிரய சாசனமானது 43 சென்டுக்கு தான் சாசனம் ஏற்பட்டுள்ளது. 43 சென்ட் என்பது 17.5 ஏர்ஸ் ஆகும். வா.சா.ஆ.2 கிரய சாசனத்தின் படி சென்ட் கணக்கில் 43 சென்ட் – க்கும் ஏர்ஸ் கணக்கில் 17.5 ஏர்ஸ் – க்கும் தான் பதிவாகியுள்ளது. மேற்படி வா.சா.ஆ. 2 சொத்து விபரத்தில் கண்டுள்ள 13.5 ஏர்ஸ் கிரய சொத்தாகாது.

வா.சா.ஆ.3 ஆவணமானது எண்.1 திருவாரூர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். அதன் சான்றிட்ட நகலை எடுத்துவந்துள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணமானது கடந்த 23.03.2020ம் தேதியில் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சாவித்திரி ஆகியோர் தமிழ்கொடி என்பவருக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் மூல ஆவணமாக வா.சா.ஆ.2 ஆவணமான 19.07.2007 தேதிய கிரய ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 சொத்து விபரத்தில் புலஎண்.57/1B1 ல் 13.5 ஏர்ஸ், 57/1B2 ல் 17.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரு புலஎண்களையும் சேர்த்து 31 ஏர்ஸ்–க்கு 76 சென்ட் கிரய சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. புலஎண்.57/1B1 ல் 13.5 ஏர்ஸ்–க்கு மூல ஆவணம் குறித்து குறிப்பிட்டு வா.சா.ஆ.3 ல் கூறப்படவில்லை.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எத்தனை ஆண்டுகளாக அரசு ஊழியராக பணியாற்றி வருகிறேன் என்றால் 9 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். நான் திருவாரூரில் எத்தனை ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன் என்றால் ஓர் ஆண்டாக பணியாற்றி வருகிறேன். பதிவு ஆவணங்களுக்கான மூல ஆவணங்களை சரிபார்க்க வேண்டிய வேலை என்னுடையதல்ல என்றால் சரிதான். மேற்படி சரிபார்ப்பு பணியானது சார்பதிவாளர் அவர்களுடையது என்றால் சரிதான். தற்போதைய சார்பதிவாளர் எத்தனை ஆண்டுகளாக எண்.1 திருவாரூர் இணை சார்பதிவாளராக பணியாற்றி வருகிறார் என்றால் 3 மாதங்களாக பணியாற்றி வருகிறார். மேற்படி தற்போதைய சார்பதிவாளரும் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள ஆவணங்களை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. கடந்த 13.04.2026 தேதிய எண்.1 இணை சார்பதிவாளர் திருவாரூர் அவர்களின் அனுமதி கடிதம் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.//

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் நாள் புதன்கிழமை**

**<u>O.S. 70/2022</u>**

வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW3–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கீத்மாலினி | தாலுக்கா | : | திருவாரூர் |
| க/பெ | : | பிரேம்சந்தர் | கிராமம் | : | தேவர்கண்டநல்லூர் |
| ஜாதி | : | | தொழில் | : | VAO |
| சமயம் | : | | வயது | : | 45/26 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தேவர்கண்டநல்லூர் கிராம நிர்வாக அலுவராக பணியாற்றி வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து வரபெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். தேவர்கண்டநல்லூர் கிராம அ–பதிவேடு அசல் எடுத்துவந்துள்ளேன். கிராம அ–பதிவேட்டின்படி புலஎண். 57/1B1 மற்றும் புலஎண்.57/1B2 ஆகிவற்றுக்கு பழையபுலஎண். 57/1B என குறிப்பிடப்பட்டுள்ளது. புலஎண். 57/1B1 என்பது இளவர் சி.சத்தியகுமார், காப்பாளர் தாயார் சரோஜா என்பவர் பெயரில் 13.5 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கு பதிவாகியுள்ளது. புலஎண். 57/1B2 என்பது அ.சண்முகம்பிள்ளை என்பவரின் பெயரில் 17.5 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கு பதிவாகியுள்ளது. **(அ–பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சாட்சியம் அளித்துள்ள மற்றும் எடுத்துவந்துள்ள அ–பதிவேடு எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் 2000 ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. 1429 பசலிக்கான அடங்கல் எடுத்துவந்துள்ளேனா என்றால் இல்லை. 1429 பசலிக்கு புலஎண்.57/1B1 மற்றும் 57/1B2 ஆகியவற்றுக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் பெயரில் பதிவுள்ளதா என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். என் முதல் விசாரணையில் நான் கூறியுள்ள விபரமான புலஎண். 57/1B2 என்பது அ.சண்முகம்பிள்ளை என்பவரின் பெயரில் 17.5 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கு எதன் அடிப்படையில் பதிவாகியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் பணிக்கு சேர்ந்து 9 மாதங்கள் ஆகிறது. ஆவண பதிவு உத்தரவுகள் எதுவும் என் வசம் இல்லை. அதனால் மேற்படி புலஎண்.57/1B2 சண்முகம்பிள்ளை பெயரில் எதன் அடிப்படையில் பதிவாகியுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது. புலஎண்.57/1B2 சம்மந்தமாக நான் எந்த சான்றிதழும் யாருக்கும் கொடுக்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் கடந்த 09.10.2019 தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இணையவழி நில உரிமை விபரத்தில் புலஎண்.57/1B2 விற்கு 17.5 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கும் புலஎண். 57/1B1 ற்கு 13.5 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கும் அறியபித்திரபிள்ளை மகன் கிருஷ்ணமூர்த்தி பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். **(கடந்த 09.10.2019 தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இணையவழி நில உரிமை விபரம் (எண்ணிக்கை 2) கணினி நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தாவா சொத்தான புலஎண்.57/1B1 மற்றும் புலஎண்.57/1B2 ஆகியவை யார் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் கிருஷ்ணமூர்த்தி அனுபவத்தில் இருந்துவருவதாக நான் கிராம விசாரணையில் தெரிந்துகொண்டேன். அனுபவம் குறித்து நான் சான்றிதழ் எதுவும்

வழங்கப்படவில்லை. தாவா சொத்தான புலஎண்.57/1B1 மற்றும் புலஎண்.57/1B2 ஆகியவற்றுக்கு இணையவழி வருவாய் பதிவில் இளங்கோவன் பெயரிலோ ரவி பெயரிலோ இல்லை என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ. 15 மற்றும் பி.சா.ஆ.1** ஆவணங்கள் மட்டும் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.04.15 18:33:17 +0530